IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**O.S.NO:199/2013**

Name: Shamil Ahamed **DEP OF WITNESS:PW2**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

நான் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா நம்பர் 5-ல் 4-வது வரியில் தாவா தாக்கல் செய்யும் 2 நாட்கள் முன்னதாக தாவா பிரதிவாதிகள் அனைவரும் ஒன்று கூடி தாவா சொத்து விவரங்களில் உள்ள வண்டி வழி மற்றும் நடைபாதை வழியின் அமைதியான சுவாதீன அனுபவத்தை தடைசெய்ய முயற்சித்ததால் அதை 1-ம் வாதி மிகுந்த சிரமத்துடன் தடுத்துநிறுத்தினார் என்றும் பின்னர் அதே பாராவில் கடைசி பகுதியில் வண்டி வழி நடைபாதை வழி அனுபவிப்பதை தடைசெய்ய முயற்சிக்கலாம் என்பதால் பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கினை 1-ம் வாதி தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேன். ஆகையினால் 2017-ல் நான் கிரயம் வாங்கியதாக சொல்லக்கூடிய தேதி அன்றே வழக்கு விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கு நிலுவையில் இருப்பதை அறிந்து தான் நான் கிரயம் வாங்கினேன் என்பதால் என்னுடைய கிரயம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கினை லோகநாதன் மற்றும் அவரது தம்பி பெயரில் தாக்கல் செய்துள்ளேன். அவருடைய பெயர் எனக்கு தெரியாது. அவர்கள் இருவரை தவிர வேறு யார் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. பாஸ்கரன் யார் என்று எனக்கு தெரியாது. சாட்சி தற்போது பாஸ்கரன் லோகநாதனின் தம்பி என்று மாற்றி கூறுகிறார். பாஸ்கரன் என்பவரின் பேரில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகத்தில் இல்லை. பாஸ்கரனை நான் பார்த்துள்ளேன் அவரை எனக்கு நினைவில் இல்லை சாட்சி அவரை பார்த்தால் மட்டும் தான் தெரியும் என்று கூறுகிறார். எத்தனை சர்வே எண்ணிற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று ஞாபகத்தில் இல்லை. தாவா 1-வது இன சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா 1-வது இன சொத்தின் முழுவிஸ்தீரணம் எனக்கு தெரியாது. மேற்படி சொத்திற்கு எனக்கு செக்குபந்தி தெரியாது. தாவா 2 மற்றும் 3-வது இன சொத்தின் சர்வே எண்ணோ, விஸ்தீரணமோ, செக்குபந்தியோ தெரியாது. நான் கியரம் வாங்கிய சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், செக்குபந்தி தெரியாது. சர்வே எண்.11/2-ல் 3 ஏக்கர் 26 செண்ட் மட்டும் நான் கிரயம் வாங்கி உள்ளேன். மீத சொத்தை நான் கிரயம் வாங்கவில்லை. மேற்படி சர்வே எண்ணில் 8 ஏக்கர் 10 செண்டில் நான் கிரயம் வாங்கிய 3 ஏக்கர் 26 செண்டை தவிர மீதமுள்ள சொத்து யாருக்கு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்ணில் உள்ள 8 ஏக்கர் 10 செண்டில் நான் 4 ஏக்கர் கிரயம் பெறவில்லை 3 ஏக்கர் 26 செண்ட் தான் கிரயம் பெற்றுள்ளேன். சர்வே எண்.11/2 8 ஏக்கர் 10 செண்டில் நான் கிரயம் வாங்கிய 3 ஏக்கர் 26 செண்டில் தான் வண்டி வழி நடைபாதை உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. தாவாவில் சொல்லியுள்ள வண்டி வழி மற்றும் நடைபாதை எந்த சர்வே

எண்ணில் உள்ளது என்று எனக்கு ஞாபகத்தில் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் வண்டி வழி மற்றும் நடைபாதை சர்வே எண்.3/4, 4-ல் 1 மற்றும் 11/2சி-யில் உள்ளதாக சொல்லியுள்ளேன். மேற்படி சர்வே எண்களில் வண்டி வழி நடைபாதை உள்ளதாக வழக்குரை சொத்துவிவரத்தில் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போன்று மேற்சொன்ன சர்வே எண்கள் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.3/4 என்ன சப்டிவிஷனாக பிரிக்கப்பட்டுள்ளது என்று ஞாபகத்தில் இல்லை. சர்வே எண்.3/4-ல் எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது. சர்வெ எண்.3/4-ல் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கிரயம் வாங்கினேன் என்று எனக்கு தெரியாது என்றால் ஞாபகத்தில் இல்லை. சர்வே எண்.3/4 வண்டிவழி மற்றும் நடைபாதை எந்த திசையில் எவ்வளவு விஸ்தீரணத்தில், எவ்வளவு நீள அகலத்தில், எந்த செக்குபந்தியில் உள்ளது என்று தெரியாது என்று சொன்னால் சாட்சி தனக்கு ஞாபகத்தில் இல்லை என்று கூறுகிறார். எனக்கு வழக்குரையில் கூறியுள்ள வழி பாதையை பற்றி விவரம் தெரியாததால் தான் அனைத்து கேள்விகளுக்கும் நான் ஞாபகத்தில் இல்லை என்று பதிலளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஞாபகத்தில் இல்லை என்று ஏன் தெரிவிக்கிறேன் என்றால் நான் சொல்வது போன்று வழிபாதையே இல்லை என்பதால் தான் அவ்வாறு ஞாபகத்தில் இல்லை என்று பதிலளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எருக்கம்பட்டு கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேன். லோகநாதன் வகையறா சொத்தை நான் பார்த்துள்ளேன். அது தாவா சொத்தின் பக்கத்தில் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள சொத்து 1-ம் பிரதிவாதியின் சொத்து என்று சொன்னால் போட்டோவை பார்த்துவிட்டு எந்த நிலத்தை எடுத்தாலும் இதுபோன்று தான் இருக்கும் என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் கிரயம் வாங்கிய 3 ஏக்கர் 26 செண்டிற்கு விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கியதாக சொல்லக்கூடிய சர்வே எண் 3/4-ன் உட்பிரிவு எனக்கு தெரியாது. சர்வே எண்.11/2 சர்வே எண்ணை பற்றி குறிப்பிடும் போது மரியம்பீ பாக நிலத்தில் நுழைந்து போகவர பாத்தியம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன். மரியம்பீ யார் என்று எனக்கு தெரியாது. மரியம்பீக்கு வாரிசுகள் இருக்கிறார்களா, இல்லையா என்று எனக்கு தெரியாது. மரியம்பீ சொத்து தற்போது யாரிடம் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. ஆகையினால் மரியம்பீ நிலத்தில் நுழைந்து என்பது எந்தெந்த சர்வே எண் என்று என்னால் சொல்ல இயலாது. தாவா 1-வது இன சொத்தில் குறிப்பிட்டுள்ள மரியம்பீ பாக நிலத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் ஏதேனும் சம்மந்தம் உண்டா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.4/2-ல் கிரயம் வாங்கியுள்ளேன் எவ்வளவு சொத்து வாங்கினேன் என்று ஞாபகம் இல்லை. அதேபோல் 3/4-ல் எவ்வளவு சொத்து வாங்கினேன் என்று ஞாபகம் இல்லை. 4/2 நான் கிரயம் வாங்கிய சொத்திற்கு உட்பிரிவு என்ன என்று எனக்கு தெரியாது. 3/4, 4/2 சர்வே எண் சொத்திற்கு வழி பாதை உள்ளதாக வழக்கில் கோரியுள்ளேனா என்றால் ஞாபகத்தில்

இல்லை. அந்த சர்வே எண்ணிற்கு வழிபாத்தியம் இல்லை என்று சொன்னால் இருக்கிறது. மேற்படி சர்வே எண்களுக்கு வழி பாத்தியம் 4/1,3/4 ஆகிய சர்வே எண்களில் வழி பாத்தியம் உள்ளதாக சொல்லியுள்ளேன். மேற்படி விவரத்தை வழக்கு சொத்துவிவரத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லாமல் சொல்லியுள்ளதாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.4/1 யாருக்கு சொந்தமானது என்று தெரியுமா என்றால் சாட்சி ஞாபகத்தில் இல்லை என்று கூறுகிறார். சாட்சி நேரடையாக கேட்கப்படுகின்ற கேள்விக்கு தெரியும், தெரியாது என்று சொல்லாமல் ஞாபகத்தில் இல்லை என்று மழுப்பலாக கூறுகிறார். மேற்படி இரண்டு சர்வே எண்ணில் எந்த திசையில் நான் சொல்லக்கூடிய வண்டி வழி பாதை உள்ளது என்று எனக்கு தெரியாது. வண்டி வழி என்ன செக்குபந்தியில் உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது. ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எத்தனை அடி, நீள, அகலத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனக்கு கிரயம் வாங்கிய சொத்திற்கும் 1-ம் பிரதிவாதி வாங்கய சொத்திற்கும் பி.சா.ஆ.1 மூலபத்திரம் என்றால் சரிதான் மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில் வண்டி வழி நடைபாதை பாத்தியம் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றும் 1-ம் பிரதிவாதி மற்றும் அவருக்கு கிரயம் கொடுத்த நபர் மற்றும் நான் பின்னிட்டு நடைபாதை உள்ளதாக நாங்களாகவே பொய்யாக பத்திரம் எழுதி ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. பொய்யாக நாங்கள் தயார் செய்த பத்திரத்தின் மூலம் வண்டிவழி பாதை உரிமை ஏற்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அந்த பத்திரங்கள் இந்த பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.11/2-ல் நான் வாங்கிய 3 ஏக்கரா 26 செண்டில் பிரதிவாதிகள் உரிமை கோரி தகராறு செய்யவில்லை. சர்வே எண்.3/4 நான் கிரயம் வாங்கிய 3 ஏக்கரா 93 செண்ட் உரிமை உள்ளதாக பிரதிவாதிகள் உரிமை கோரி தகராறு செய்தார்களா என்றால் இல்லை. சர்வே எண்.4/2 எவ்வளவு சொத்து கிரயம் வாங்கினேன் என்று எனக்கு தெரியாது. நான் கிரயம் வாங்கிய சொத்தில் பிரதிவாதிகள் உரிமை கொண்டாடி தகராறு செய்தார்களா என்றால் அவ்வாறு பிரச்சனை எதுவும் செய்யவில்லை. லோகநாதன் 1-ம் பிரதிவாதி எருகம்பட்டு கிராமத்தில் சொத்து வாங்கியுள்ளார். சர்வே எண்.12/1,12/2,12/3 ஆகிய சொத்துக்களை பிரதிவாதி வாங்கியுள்ளார் அதில் நான் உரிமை கோருகிறேனா என்றால் 12/1-ல் மட்டும் வழி பாத்தியம் கோருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் 12/1 சொத்தில் வழி பாதை உள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. லோகநாதன் தம்பி பொன்னுரத்தினம் 2-ம் பிரதிவாதி எருகம்பட்டு கிராமத்தில் சொத்து வாங்கியுள்ளாரா என்றால் வாங்கியுள்ளார் அவரது மனைவி வாங்கியுள்ளாரா என்று எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. A.CHELLAPANDIAN,
DISTRICT MUNSIF.